**O.S.No. 77/2019**

**Date 18.02.2025**

**வா.சா1 செல்வி**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா சொத்துக்கள் எனது தகப்பனார் ராமருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தில் கண்ட வீட்டில் பிரதிவாதி குடியிருந்து வருகிறார் என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை, கேட்டு சொல்கிறேன். 1 முதல் 3 அயிட்ட தபசில் சொத்துக்களை பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். எனது தகப்னார் இறக்கும்போது சுமார் 70 வயது அவருக்கு இருக்கும். எனது தகப்பனார் இறப்பதற்கு முன்னரே பிரதிவாதி தான் தாவா சொத்துக்களை அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னுடைய சகோதரர் என்றால் சரிதான். எனக்கு 2018 ம் ஆண்டில் திருமணம் நடைபெற்றது. சுந்தரி என்பவர் என்னுடைய தாயார். ஜெயலட்சுமி என்னுடைய சகோதரி ஆவார். 4 ம் பிரதிவாதி என்னுடைய சகோதரி ஆவார். மேற்படி சுந்தரி, ராமலட்சுமி ஆகியோர் ஒன்றாக குடியிருந்து வருகின்றனர். 2 ம் பிரதிவாதியிடம் எனது தகப்பனார் பெற்ற கடனை தாவா சொத்தாக காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி கடன் தொகையை என்ன காரணத்திற்காக வழக்கில் குறிபிட்டு காண்பிக்கவில்லை என்றால் அதுகுறித்து தெரியவில்லை. மேற்படி அடமான கடன் தொகையை பிரதிவாதி 2 ம் வாதியிடம் திரும்ப செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் பிரதிவாதி வசம் ஒப்படைத்து அவர் அதுமுதல் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. அவ்வாறு அனுபவம் செய்து வந்த பிரதிவாதி, உங்களுக்கு திருமணத்திற்கும் 2 ம் வாதியின் திருமணத்திற்கு செலவு செய்து வந்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பிரதிவாதிக்கு தனித்து அனுபவம் செய்து வந்து, 2 ம் வாதியிடம் பெற்ற கடனை 2 ம் வாதியிடம் திரும்ப செலுத்திவிட்டு செல்லெழுதி கேட்டதற்கு அதற்கு எதிர்வினையாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதிக்கு எனது தகப்பனார் சொத்துக்களை கொடுத்த விவரம் நன்கு தெரியும் என்றாலும், பிரதிவாதி தான் எங்களை காப்பாற்றி வந்தார் என்றாலும் சரியல்ல. வா.சாஆ.2 அடமான பத்திரத்தில் கண்ட கடன் தொகையை பிரதிவாதி செலுத்திவிட்டதால் வழக்கு சொத்து விவரத்தில் கடன் தொகை குறித்து காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி கடனை பொறுத்து 2ம் வாதி எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிராது தாவா சொத்துக்கள் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதாக உள்ளதால் தான் 2ம் வாதி கடன் தொகை கோரி வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2ம் வாதியுடன் சேர்ந்து பிரதிவாதியை மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனக்கோ, இதர வாதிகளுக்கோ வழக்கு சொத்தில் எந்தவித பாகப்பிரிவினையும் கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி இல்லை.